[21st March 1964

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கொடுக்கக்கூடாது என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அதற்காக தனிப்பட்ட முறையில் நானோ, மற்றவர்களோ ஒவ்வொன்றுக்கும் ஹை கோர்ட்டுக்குச் சென்று அப்பீல் செய்துகொண்டிருப்பது என்பது முடியாத காரியம். அரசாங்கத்தின் கவனத்திற்கு வேண்டுமானால் கொண்டுவரலாம். அந்த நேரத்தில் அரசாங்கம் தலையிடலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். கிருஷ்ணகிரியிலிருந்து திருவண்ணாமலைக்கு ஓடிக்கொண்டிருந்த பஸ், கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூருக்கு 31 மைலுக்கு வேரியேஷன் கொடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, கிருஷ்ணகிரியிலிருந்து ஹோசூருக்கு இன்னொரு பஸ் விட்டால் அரசாங்கத்திற்கு வரிமூலம் வருமானம் வந்திருக்கும் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு சொன்ன பதிலையே நான் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். தவறாக ஏதாவது அதிகமாகக் கொடுத்திருந்தால் அதைப்பற்றி புகார் செய்யவேண்டியது சர்க்காரிடம் அல்ல. கோர்ட்டுகளில்தான் புகார் செய்யவேண்டும். ஏனென்றால் சர்க்காருக்கு இவ்விஷயத்தில் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நாம் சமீபத்திலே இயற்றிய சட்டத்தின் பிரகாரம், ஹை கோர்ட் முடிவைக்கூட உட்படுத்துவதற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து சட்டம் இயற்றியிருக்கிறோம் அல்லவா ? ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருப்பது எல்லாம் ஆடமேடிக் ஆக ரெஸ்டோர் ஆனதாக ஆகாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot express legal opinion as a member of the Government. The hon. Member is advised to consult a lawyer to find out the legal position.

திரு. ரா. கு. வீரப்ப செட்டியார் : இந்த ஆண்டில் புதிதாக ஜீப் ரூட் ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அவ்வாறு எத்தனை ரூட்கள் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜீப்புகள் கிடைக்கவில்லை. அதனால் ஜீப் ரூட்கள் ஆரம்பிப்பது சந்தேகம்.

திரு. து. ப. அழகமுத்து : "ஆர்.டி.ஏ.-க்கு டைரக்ஷன் கொடுப்பதற்குச் சர்க்கார் விரும்பவில்லை, நிறுத்திவிட்டது" என்று அமைச்சர் கூறினார்கள். ஒரு வேரியேஷன் ஆர்.டி.ஏ.-க்கு வராமல் அங்கே உள்ள அதிகாரி எத்தனை வருஷங்கள் வேண்டுமானாலும் நிறுத்தி வைக்கலாம். ஆனால், அதை வைத்து அப்பீல் செய்ய முடியாது. ஆகவே, இப்படி ஒரு நிலைமை ஏற்படுவதைத் தீர்க்க சர்க்கார் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கிருக்கும் சட்டப்படி, சமீபத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற ஹை கோர்ட், சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகளின்படி சர்க்கார் தலையிட முடியாது என்ற நிலைமை இருக்கிறது. சர்க்கார் தலையிடுவதான உத்தேசம் இல்லை.

திருச்சி நகராட்சியின் கீழுள்ள நிலங்கள் (ஆர்ஜிதம் செய்தல்)

*355 கேள்வி.—**திரு. எம். எஸ். மணி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகராட்சிக்குச் சொந்தமான டி.எஸ். 1585 எண்ணுள்ள நிலத்தை திருச்சி கலெக்டர் அவர்கள் நகராட்சியின் அனுமதியின்றி ஒரு தனிப்பட்ட நபருக்கு அடமானம் செய்தது உண்மையா ?

(இ) ஆமெனில், கலெக்டர் அவர்களின் நடவடிக்கை நகராட்சியின் உரிமையைப் பாதிக்கிறது என்பது அரசாங்கம் அறியுமா ?

21st March 1964]

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The land belongs to the Government being a poramboke but only vests in the municipality under section 61 (1) of the Madras Act V of 1920. The municipality has no power of disposal of lands belonging to Government. The Collector, in this case, had given reasonable time to the municipality to communicate its views in the matter which opportunity it did not avail of.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ம் தேதி அன்று திருச்சி நகராட்சி மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் எண். 519–ல், "மேற்படி நிலம் நகராட்சி மன்றத்திற்குத் தேவைப் படுவதால் மன்றத்தின் சம்மதம் இன்றி திருச்சி கலெக்டர் செய்த அடமானத்தை ரத்து செய்யக் கேட்டுக்கொள்கிறோம்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னிடம் இருக்கும் தகவலின்படி, இந்த அடமானம் செய்யவேண்டிய முடிவை அதற்கு முன்கூட்டியே கலெக்டர் எடுத்துவிட்டார். ஆகையால், அடமானம் செய்ததற்குப் பிறகு தான், ரத்து செய்யவேண்டும் என்று தீர்மானம் இருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்லக்கூடியதிலிருந்து தெரியவருகிறது. அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால், கலெக்டர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்கூட்டியே "இதற்கு வேண்டிய ஆதாரங்களை நகரசபை கொடுக்கவேண்டும்" என்று கேட்டபோது, அவர்கள் எந்தவிதமான முடிவும் சொல்லாத காரணத்தால், அந்த நிலத்தை அடமானம் செய்திருக் கிறார்கள்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ம் தேதி அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1210–ல் "ஜம்புநாத அய்யர் என்பவருக்கு நிலத்தை அடமானம் செய்திருந் தார்கள். நகராட்சி மன்றத்திற்குத் திரும்ப அந்த இடம் தேவை. அடமானத்தை ரத்து செய்துவிட வேண்டும்" என்று நிறைவேற்றியும், அதற்குப் பிறகு, கலெக்டரால் திருச்சியிலே அந்தப் பணக்காரருக்கு நிலம் கொடுக்கப்பட்டது என்பதாவது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பணக்காரரா, ஏழையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. இங்கே என்னிடம் இருக்கும் விவரத்தின்படி, கலெக்டர் எந்த எந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுத்திருக்கிறார்கள். நகரசபை குறிப்பிட்ட காலத்தில் அதற்கு ஆட்சேபனை சொல்லாத காரணத்தால்தான் இந்த அடமானத்தை கலெக்டர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதுதான் என்னிடம் இருக்கும் தகவல்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, கலெக்டரிடமிருந்து கிடைத் திருக்கும் விவரத்தை மட்டும் வைத்து அமைச்சர் அவர்கள் பதில் சொல் கிறார்களா ? நகராட்சி மன்றத்திடமிருந்தும் விவரத்தைக் கேட்டு சேகரித்திருக்கிறாரா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்குப் பதில் சொல் வதற்கு ஒரு இடத்திலிருந்து தகவல் வந்தால் போதும்.

திரு. எம். எஸ். மணி : 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் தேதி அன்று திருச்சி நகராட்சி மன்றத்திலிருந்து கமிஷனர் அவர்கள் கலெக்ட ருக்கு ஒரு கடிதம் எழுதியும் இதுவரையில் பதில் வரவில்லை என்பதாவது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.